சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 11.06.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். CP 2891/E/2023**

திரு.M.ரவீந்திரன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

முதல் மேல்முறையீட்டு அலுவலர்,
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
சோழிங்கநல்லூர் வட்டம்,
சென்னை மாவட்டம்.

******

## ஆணை

இவ்வழக்கு குறித்து இவ்வாணையத்தில் உள்ள ஆவணங்களை 10.06.2026 அன்று பரிசீலித்ததில் 22.05.2025 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவு பொதுத் தகவல் அலுவலரால் நிறைவேற்றப்படவில்லை என தெரியவருகிறது.

2. ஆகவே முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் அவர்கள் இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கு தொடர்பான இவ்வாணையத்தின் 22.05.2025 தேதியிட்ட உத்தரவினை முழுமையாக நிறைவேற்றி, அதுகுறித்த எழுத்து மூலமான அறிக்கையினை **இவ்வாணையத்தில் 30.07.2026 அன்று தவறாமல் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர். சோழிங்கநல்லூர் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது**.

3. மேலும், 22.05.2025 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவு நிறைவேற்றப்படாததால் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காலவிரையம்/ மனவுளைச்சலை ஈடுசெய்யும் பொருட்டு, **தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(8)(b)-ன்கீழ் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) வழங்க**, **வட்டாட்சியர் அலுவலகம், சோழிங்கநல்லூர் வட்டம், சென்னை என்ற பொது**

**<u>அதிகார அமைப்பிற்கு உத்தரவிடப்படுகிறது</u>**. மேற்படி தொகையினை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்தததற்கான அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 30.07.2026 அன்று தவறாமல் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

4. 22.05.2025 தேதியிட்ட இவ்வாணைய விசாரணையில் ஆஜராகி ஆணையத்தின் 22.05.2025 தேதியிட்ட உத்தரவினை நிறைவேற்றத் தவறிய பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், சட்டப் பிரிவு 20(2)-ன்கீழ் துறைவாரி நடவடிக்கை மேற்கொள்ள ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினை பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து அவ்வறிக்கையினை **இவ்வாணையத்தில் 30.07.2026 அன்று தவறாமல் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

5. மேற்குறித்த உத்தரவுகளை நிறைவேற்ற தவறும் பட்சத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவுகளின் கீழான நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என்று முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், சோழிங்கநல்லூருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 2891/E/2023</u>**

**<u>பெறுநர்</u>**

வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், சோழிங்கநல்லூர் வட்டம்,
சென்னை மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர், (06.01.2026 தேதியிட்ட விசாரணையில் ஆஜரான)
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
சோழிங்கநல்லூர் வட்டம்,
சென்னை மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.M.ரவீந்திரன், த/பெ.J.மணி,
எண்.34, பொன்னியம்மன் கோயில் 2வது தெரு,
சோழிங்கநல்லூர், சென்னை - 600 119.

Copy to: File MP/PA,